ஊராட்சி மன்றத் தலைவர், சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.M.இரமேஷ்.,

ந.க.எண்.018/2024 நாள்06.03.2024

பொருள் - மனைபிரிவு ஒப்புதல் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண் 39/1C-ல் மொத்த பரப்பளவு **0.38.50** ஹெறக்டேர் (அ) **3850** ச.மீ அமைந்துள்ள "ராணி கிருஷ்ணன் நகர்" குடியிருப்பு வீட்டுமனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு **SWP/DTCP/KANCHIPURAM-LPA-LAYOUT NO:99/2022** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வீட்டு மனைகள் விற்பனை செய்ய சிறுகாவேரிப்பாக்கம் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை -
1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். NNJK42UT/2022/TCP நாள்.31.10.2022
2. சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண். நாள்.
3. திருமதி.ராணி கிருஷ்ணன், கதவு எண்.32/96. சாலை தெரு, காஞ்சிபுரம்

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், **சர்வே எண்.39/1C-ல்** மொத்த பரப்பளவு **0.38.50** ஹெறக்டேர் (அ) **3850** ச.மீ பரப்பில் அமைந்துள்ள பெயரிடப்படாத குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு அமைப்பு வரைபடம் பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட சாலை அமைப்பு Blue Print-ல் வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி, **அனைத்து சாலைகள், மூலை முடுக்குகள், பொது உபயோகம், மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் சிறுகாவேரிப்பாக்கம் கிராம ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.3836/2022** நாள்.29.09.2022-ன்படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனை தொடர்ந்து பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு **SWP/DTCP/KANCHIPURAM-LPA-LAYOUT NO:99/2022** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கபட்டுள்ளதாலும் கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டுள்ளதாலும், மேற்படி "ராணி கிருஷ்ணன் நகர்" வீட்டு மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **23** வீட்டு மனைகளை விற்பனை செய்ய கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சிறுகாவேரிப்பாக்கம் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

- நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கிடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதல் அன்றி சேய்தல் கூடாது.
- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.
- மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்தவொரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு உந்த விதத்திலும் பிரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.
- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
- நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். ந.க.எண். NNJK42UT/2022/TCP நாள்.31.10.2022-ன்படி செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதாரர் பின்பற்றவேண்டும்.
- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள்மீது குற்றிவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்படவேண்டும்.
- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்படவேண்டும்.
- மனைபிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

M.JGL2j

ஊராட்சி மன்றத் தலைவர்
சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திருமதி.ராணி கிருஷ்ணன்,
கதவு எண்.32/96. சாலை தெரு,
காஞ்சிபுரம்.

நகல் - மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - இணை பதிவாளர்(எண் I) காஞ்சிபுரம் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் - வட்டாட்சியர், காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - The Chairman, Tamilnadu Real Estate Rugularity Authority,
No.1A.CMDA Tower II, 1st Floor, Gandhi Irwin Road, Egmore, Chennai – 8.

நகல் - ஊராட்சி செயலர், சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி.

தீர்மான நகல்

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சியில் 06-03-2024 தேதியன்று ...காலை... கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.M.இரமேஷ், அவர்களின் தலைமையில் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் விவரம் பின்வருமாறு

. பொருள் எண். :16 .

சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், **சர்வே எண் 39/1C**-ல் மொத்த பரப்பளவு **0.38.50** ஹெக்டேர் (அ) **3850** ச.மீ பரப்பில் அமைந்துள்ள **"ராணி கிருஷ்ணன் நகர்"** வீட்டு மனைப்பிரிவில் (Layout) உள்ளடங்கிய அனைத்து சாலைகள், மூலை முடுக்குகள், பொது ஒதுக்கீடு, மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடங்களுக்கு வரைபடத்திற்கு தொழில் நுட்ப அனுமதி (Techical Sanction) மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் அவர்களின் கடித ந.க.எண். NNJK42UT/2022/TCP நாள்.31.10.2022 நாளிட்ட கடிதத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட Blue Print வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சாலைகள், மூலை முடுக்குகள், பொது ஒதுக்கீடு, மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.3836/2022 நாள்.29.09.2022 -ன்படி பெறப்பட்ட தன் அடிப்படையிலும், **"ராணி கிருஷ்ணன் நகர்"** வீட்டு மனைப்பிரிவில் அமைந்துள்ள 23 மனைகளை விற்பனை செய்திட ஊராட்சி மன்றம் இறுதி ஒப்புதல் வழங்க கோருதல்.

. தீர்மானம் எண். :16

சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், **சர்வே எண் 39/1C**-ல் மொத்த பரப்பளவு **0.38.50** ஹெக்டேர் (அ) **3850** ச.மீ பரப்பில் அமைந்துள்ள **"ராணி கிருஷ்ணன் நகர்"** வீட்டு மனைப்பிரிவில் (Layout) ஒதுக்கீடு செய்யப்பட்ட 23 மனைகளை விற்பனை செய்திட சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி மன்றம் இறுதி ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

M. ரமேஷ்

ஊராட்சி மன்றத் தலைவர்
சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.